# அற்புதத் திருவந்தாதியில் பக்தியுணர்வு

42

**முனைவர் இரா. துர்கா & முனைவர் கோ. ப. நல்லசிவம்**
**மெய்யியல் துறை , தமிழ்ப் பல்கலைக்கழகம்**
**தஞ்சாவூர் - 613010**
**மின்னஞ்சல் : durganiksha8313@gmail.com ; gpnsivam@gmail.com**

**ஆய்வுச்சுருக்கம்**

மானுடப்பிறவியின் நோக்கத்தினை அறியாமல் உழலும் உயிர்களுக்கு காரைக்கால் அம்மையார் தனது வாழ்க்கையின் நிகழ்வுகளையும், அவற்றின் மூலம் தான் உணர்ந்த நிலையினையும், "அறிவானும் தானே; அறிவிப்பான் தானே; அப்பொருளுந்தானே அவன்" என அற்புதத்திருவந்தாதியில் சிவபெருமானின் பெருமையை எல்லாம் சிவனே என்பதை விளக்கும் விதம், இறையருளை மக்களாகிய நாமும் உணர்ந்து பிறவிப்பெருங்கடல் கடக்க, வழிகாட்டுவது சிறப்புக்குரிய ஒன்றாகும்.

**திறவுச்சொற்கள்**

அற்புதத் திருவந்தாதி, இறைவன், அம்மையார், பேய் உருவம், அந்தாதி, திருவடி, பிறவிப்பயன், அன்பு, உயிர்.

**முன்னுரை**

காரைக்கால் அம்மையார் பேய்க்கணங்களில் ஒன்றாகத் தானும் இருக்க வேண்டும் என்று விரும்பியதோடு, கணவனுக்காகக் காத்திருந்த அவருடைய உடலை நீத்து, பேய் உருவத்தைப் பெற்றதால், இறைவனே அவரை காரைக்கால்பேய் என்று அழைத்தார். அவ்வாறு பேயுரு பெற்றதன் மூலம் மனித உடலிலிருந்து மேலும் தூய்மைப் பெற்று இறைவனோடு கலந்து வாழும் பேற்றினைப் பெற்றார். இப்படி காரைக்கால் அம்மையார் எடுத்த முடிவு எல்லோரும் போற்றக் கூடியதாக இல்லாமல் வியக்கக் கூடியதாக இருந்தது. எந்தவொன்றும் தன்னைத் தீண்டாமல், எந்தவொன்றாலும் தான் மயங்காமல் இறைவனாகிய சிவபெருமானால் விரும்பப்படும் உருவம் தான் பேய்உருவம். பேய் உருவாகிய நிலையில்தான் அற்புதத் திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்த பதிகம் போன்றவற்றைப் பாடினார்.

**அற்புதத் திருவந்தாதி**

அநு-ஆன்மா, பூதி-உடன் ஆவது. எனவே, அநுபூதி என்பதற்கு இறைவனுடன் ஒன்றாவது என்பது பொருள். அற்புதம் என்பது யாவரும் வியந்து போற்றுவதற்குரிய அடிமைத்திறம் எனப் பொருள்படும். அதற்கு ஞானம் எனவும் பொருள் கொள்வர். அந்தாதி என்பது சிற்றிலக்கிய வகை 96-ல் ஒன்றாகும். சிவபெருமானின் பெருமைகளையும், உயர்வுகளையும், அவனின் இயல்புகளையும் அந்தாதியாப்பில் பாடியுள்ளார். உள்ளத்தில் உறுதியும், நம்பிக்கையும் கொண்டு இறைவன்மேல்

செலுத்துகின்ற பக்தி ஒன்றே இறைவனை அடையச் செய்வதற்கு வழி என்பதைப் பாடல்களில் உணர்த்துகிறார்.

**அந்தாதியின் சிறப்பு**

'அந்தம் முதலாகத் தொடுப்பது அந்தாதி' என்பது அந்தாதித் தொடைக்கு யாப்பெருங்கலக்காரிகைக் கூறும் இலக்கணம். சங்கப் பாடல்களிலும், சிலம்பிலும் அந்தாதி இலக்கியக்கூறு ஆங்காங்கே காணப்பட்டாலும் தனிவகைச் சிற்றிலக்கியமாக அந்தாதி உருவானது. கி.பி. 5ம் நூற்றாண்டில் தான் என்றும், ஏறத்தாழ 270 அந்தாதி நூல்கள் உள்ளனவென்றும், அவற்றுள் அற்புதத் திருவந்தாதி, அபிராமி அந்தாதி, பதிற்றுப்பத்து அந்தாதி, சடகோபரந்தாதி, சரஸ்வதி அந்தாதி, திருவரங்க அந்தாதி, முதலிய அந்தாதி நூல்கள் சிறப்பு வாய்ந்தனவென்றும் அறிஞர் பெருமக்கள் உரைக்கின்றனர்.

**பக்திநெறி**

மானிடம் விரும்பும் உடலழகு நீங்கி இறைவன் திருவருளால் பேயுருப் பெற்றதும், காரைக்கால்பேய் என்ற பெயர் பெற்றார். அற்புதத்திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் ஆகிய நூல்கள் பாடி இறைவனின் திருவடி நிழலில் தங்கியிருக்கும் பேறு பெற்றதும், அந்தாதி அமைப்பில் எழுந்த முதல் நூல் அற்புதத் திருவந்தாதியே ஆகும். காரைக்காலம்மையார் பேயுருப் பெற்றதும் பாடிய திருமுறை வரிசையில் பதினோராம் திருமுறையில் முதல்நூல் இந்நூலேயாகும். இந்நூலின் சிறப்புக் கருதியே திருமுறை வரிசையில் பதினோராம் திருமுறையில் இந்நூல் சேர்க்கப்பட்டுள்ளது. யாவரும் வியந்து போற்றும் அடிமைத்திறம் என்னும் பொருளினும் ஞானம் என்னும் பொருளிலும் 'அற்புதம்' என்ற சொல் நிற்கின்றது. இறைவனைப் பற்றிய பாடல் தொகுதியாகையால் 'திரு' என்னும் அடைபெற்று 'அற்புதத் திருவந்தாதி' யானது என்று அறிஞர்கள் சொற்பொருள் விளக்கம் கூறுவர். நூல் முழுமையும் வெண்பா யாப்பினது, 101 திருப்பாடல்கள் கொண்டது. இறுதிப்பாடலின் அந்தமாகிய 'பிறந்து என்னும் சொல், முதல் பாடலின் ஆதியாக அமைவது வியந்து போற்றுதற்குரியது.

**பிறவித்தொடர்பு**

இறைவனுக்கும் உயிர்க்கும் உள்ள தொடர்பைத் தத்துவ அடிப்படையிலும் உணர்வு அடிப்படையிலும் சமய நூல்கள் எடுத்தியம்புகின்றன. அவ்வகையில்,

**"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்**
**சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்"**[1]

என்று முதல் பாடலே பிறவித் தொடர்பைப் புலப்படுத்துகின்றது. பிறந்து மொழியினைப் பயின்று பேசத் தொடங்கிய காலம் முதற்கொண்டு, அன்பினாற் சிறந்து நின் திருவடிகளையே இடைவிடாது எண்ணிப்போற்றி வழிபடுகின்றேன் எனது பிறவித் துன்பத்தை தீர்த்தருள்வது எப்போது என வினவும்படியாக உள்ளது. மேலும் எனக்கு நேரும் இடையூறுகளை நீக்காராயினும், உள்ளத்தால் நினைந்து கடைபிடிப்பதற்குரிய நல்வழி இதுவென அம்மையார்,

**"இடர்களையர் ரேனும் எமக்கிரங்கா ரேனும்**

**படரு நெறிபணியா ரேனும் – சுடருருவில்**
**என்பறாக் கோலத் தெரியாடு செம்மானாக்கு**
**கன்பறாக் தென்னெஞ் சவர்க்கு"[2]**

கூறும் போது, அவர்பால் யான் வைத்துள்ள அன்பு ஒரு பொழுதும் குறையாது. இனி எம்மானாராகிய அவர்க்கு என் நெஞ்சு அன்பு இயைத்துரைத்தலும், எழுவகை பிறப்பு ஆட்செய்வோமாயின், எக்காலத்தும் வேறொருவர்க்கும் இல்லை எனது நெஞ்சத்தவர்க்கே என, **"அவர்க்கே யெழுபிறப்பும் ஆளாவோம் என்றும்"[3]** அம்மையார் குறிப்பிடுவது வியக்கத்தக்க ஒன்றாகும். எல்லா உயிர்களுக்கும் உடல், கருவி, உலக, நுகர்பொருள் என்பவற்றைப் படைத்தளிக்க வல்லவன். எங்கள் மேல் கொடிய துன்பங்கள் வந்து வருந்துங்கால் அவற்றை அறவே நீக்கி எங்களை வாழ்விப்பவனும் அவ்விறைவனே படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலையும் செய்து எவ்வுயிர்க்கும் அருள்புரிய வல்ல தனி முதல்வன் என்பதை, **"என்னெஞ்சத் தானென்பன் யான்"[4]** என்பதன் மூலம் அறியலாம். அன்பர்க்கு அருள்புரியும் நிலையில் எனது நெஞ்சமாகிய அணிய இடத்தில் இருக்கின்றான் என்றே யான் துணிவாக கூறுவேன் என எடுத்துரைக்கின்றார். இதனையே திருக்கோவையார். "சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும் என் சிந்தையுள்ளும் உறைவான்" எனக் கூறுவது சிறப்புக்குரியது. ஒரு கையுடன் கூடிய விலங்காகிய அம்மதயானையை உரித்துப் போர்த்த நெற்றிக் கண்ணனும் திருவெண்ணீறணிந்தவனும் ஆகியவனை, **"அம்மானுக் காளாயினேன்"[5]** அதாவது யானே பிறவித் தொடர்ச்சியை அறுத்தற்கு எண்ணும் மனவுறுதி உடையேனாயினேன். மேலும் ஒன்றையே என் மனத்தில் இடைவிடாது நினைந்திருந்தேன். ஒன்றாகிய (இறைவனையே) அதனையே உறுதிப்பொருளாக கொண்டதை,**"ஒன்றேயென் உள்ளத்தி னுள்ளடைத்தேன்"[6]** அம்மையார்
ஒளிமிகுந்து விளங்கும் அழகிய கையினையுடையானும்ஆகிய சிவபெருமானை ஆட்படுதலை கூறுகின்றார். இறைவனது திருவடியைக் கொண்டு பிறவியாகிய பெருங்கடலைக் கடந்து வீடுபேறடையும் சிறப்பினை,

**மீளாப்பிறவிக் கனைக்கடலை நீந்தினோங் காண்"[7]**

எனக்கூறுவது, பிறவியை கடலாக உருவகம் செய்து இறைவன் திருவடியைப் புணையாக உருவகம் செய்வது அம்மையாரின் சிறப்பாகும். இதனையே வள்ளுவர்.

**"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்"[8]**

இறைவனின் திருவடிகளை அடைந்தவரால் பிறவி என்ற பெரிய சமுத்திரத்தைக் கடக்க முடியும் என்பதை அழகாகக் கூறுகின்றார்.

**திருமேனி காண்டல்**

உயிர்களுக்குப் பொருள்களின் இயல்பினை அறிவித்து நிற்பவனும் அவனே. உயிரின் அறிவினுள்ளே அத்துவிதமாகக் கலந்து உடனிருந்து காட்சி கொடுப்பவனும் அவனே என்கிறார். மெய்பொருள் அவனே என்பதை இவ்வுயிர்கள் அறிய முற்படவேண்டும் என்கிறார்.

**“அன்றுந் திருவுருவங் காணாதே யாட்பட்டேன்”[9]**

இறைவனது திருவுருவை கண்டதை அம்மையார், எக்காலத்துக்கும் இறைவன் எவ்வுருவினை கொண்டவன் என கேட்பவருக்கு, இறைவனாகிய முதல்வனை மாணிக்கவாசகர், ‘அவனருளாளே அவன்தாள் வணங்கி” என்பதை போல், யானும் கூறுவது, அவனருளாலன்றி உள்ளவாறு காண இயலாதென, இங்ஙனம் நினது திருவுருவந்தான் எத்தகைய வடிவினதோ, எத்தன்மையதோ, பணித்தருள்வாயாக எனப் புலம்புகிறார்.

**“அரங்கமாப் பேய்க்காட்டி லாடுவான் வாளா**
**இரங்குமோ எவ்வுயிர்க்கும் ஏழாய்- இரங்குமேல்**
**என்னாக வையான்றான் எவ்வுலகம் ஈந்தளியான்**
**பன்னாள் இரந்தாள் பணிந்து”[10]**

அதாவது பேய்கள் வாழும் சுடுகாட்டினையே தனக்குரிய ஆடரங்கமாகக் கொண்டு ஆடும் இறைவன், பலநாளும் அன்பினாற் பணிந்து வேண்டினாலன்றி, எல்லா உயிர்களிடத்தும் தான் கொண்ட நடுவு நிலைமையினை நீக்கி, மும்மலப் பிணிப்பினைப் போக்குதற் பொருட்டு ஐந்தொழில் திருக்கூத்தினை ஆடியருளும் இறைவன் நலம் செய்தலில் சிறிதும் விழுவினான் அல்லன் என்பதனை சிவஞானபோதத்தில்,

**“சார்ந்தாரைக் காத்தல் தலைவர்கடன் ஆதல்**
**சார்ந்தாரைக் காத்தும் சலம் இலனாய்ச்”[11]**

எனவரும் வெண்பா இங்கு எடுத்துரைக்கின்றது. பிறர் எவர்க்கும் இல்லாத ஒப்பற்ற அனற்கண்ணினைச் சிறிதே விழிக்கச் செய்து தனது நெற்றியிற் கொண்டருளிய சிவபெருமானது பேய்ச் சுற்றமாகிய நல்ல சிவகணங்களுள் ஒன்றாய் விளங்கும் நாம், நமக்கு இப்பேய் வடிவு என்றும் பொருந்தியிருந்தாலும் அன்றி இடைக்காலத்தில் நம்மை விட்டு நீங்கினாலும் அன்றி இதனினும் சிறந்த பிறிதோருடம்பு நாம் கேளாமல் வந்து கிடைத்தாலும் இப்பொழுது பெற்றுள்ள பேய் வடிவாகிய இதனையன்றி யான் வேறெதனையும் விரும்பமாட்டேன் என்பதனை,

**“பெறினும் பிறிதியாதும் வேண்டேம் நமக்கீ**
**துறினு முறாதொழியு மேனும் – சிறிதுணர்த்தி**
**மற்றொருகண் நெற்றிமேல் வைத்தான்றன் பேயாய**
**நற்கணத்தி லொன்றாய நாம்”[12]**

என்று அம்மையார் குறிப்பிடுகின்றார். இறைவன் மீது உள்ள அன்பினை அரன் என்னும் திருநாமமுடைய இறைவனை அன்பாகிய போர்வையினாலே போர்த்தி அவனது பொருள் சேர் புகழைப் பாடுவதை,

**“ஆர்வல்லார் காண அரவைனை யன்பென்னும்**
**போர்வையதனாலே போர்த்தமைத்துச் – சீர்வல்ல**
**தாயத்தால் நாமுந் தனிநெஞ்சி னுள்ளடைத்து**
**மாயத்தால் வைத்தோம் மறைத்து”[13]**

நம் மனமாகிய தனியிடத்தில் மறைவாக இறைவனை வைத்துப் போற்றினும், அப்பெருமானைப் புறத்தே எங்கும் காணவல்லார் எனக் கூறுகின்றார். இறைவனுக்கு ஆட்பட்ட மெய்யடியார்கள் இறைவனது திருவருள் இன்பத்தில் திளைத்து மகிழும் நிலையில் தமக்குள் கூறுவதாக அமைந்ததுள்ளது. மேலும்,

**“ஆராத வன்பினோ டண்ணலைச் சென்றேத்துவார்**
**பேராத காதல் பிறந்து”[14]**

அதாவது சிவபெருமானை ஆராதபேரன்புடன் போற்றிப் புகழும் அடியார்கள் என்றும் நிலை பெயராத பெருங்காதல் தோன்றிப் பெருக அவ்விறைவனை அடைந்து ஏத்தி மகிழும் பேரின்பத்தில் திளைப்பதே, இறைவனோடு உயிருக்குள்ள தொடர்பைப் புலப்படுத்துகின்றது.

கடவுள் கொள்கையை உணர்த்தவந்த காரைக்கால் அம்மையார், தனது எண்ணங்களை நடைமுறை வாழ்வியலோடு இணைத்துக் கூறியுள்ளது வரவேற்கத்தக்கது. இறைவனிடம் பக்தி செய்து வாழ்வோர்கள் தொல்வினை நினைத்தால், பண்பு சித்தத்தில் ஒடுக்கம் ஏற்படுத்தும் என்பதையும், வினையால் ஏற்படும் விளைவுகளை நற்செயல்களால் அடக்கலாம் என்பது அம்மையாரின் எண்ணம், பிறப்பு, இறப்பு ஆகிய சுழற்சியிலிருந்து இறைவன் ஆன்மாவைக் காத்திடுவான் என்பதையும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். யார் எவ்வித வழிபாடு இயற்றினாலும் வழிபடுவோரின் விரும்பும் தேவனாக வருபவன் நீலமணி மிடற்றனே என அம்மையார் குறிப்பிடுகின்றார். மனித அறிவு சிற்றறிவாகும். இறைவன் ஞான வடிவினன் என்பதையும் ‘ஞானமயன்’ என்ற சொல்லால் அம்மையார் குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது. இறைவன் அயனாகவும், அரியாகவும், அரணாகவும் இருந்து படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களை இயற்றுகின்றான். இம்மூவரும் ஒருவரே. செயற்பாட்டால் வேறுபடுவர் என மொழிந்து சமய சமரசம் காண அம்மையார் ‘அனைத்துமானவன்’ என்பதை வலியுறுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**மேற்கோள்கள்**

1. நடராசன், பதினொராந்திருமுறை, மூலமும் உரையும், அற்புதத் திருவந்தாதி பா-1
2. அற்புதத் திருவந்தாதி பா-2
3. மேலது பா-3

4. மேலது பா-6
5. மேலது பா-7
6. மேலது பா-11
7. மேலது பா-16
8. திருக்குறள்-10
9. அற்புதத்திருவந்தாதி-61
10. மேலது பா-78
11. முருகவேல், சிவஞானபோதம், மூலமும் உரையும் ப-125
12. அற்புதத் திருவந்தாதி பா-86
13. மேலது பா-96
14. மேலது பா-101

**துணைநூற்பட்டியல்**

1. அருணாசலம். ப பக்தி இலக்கியம் ஓர் அறிமுகம்,முல்லை நிலையம்,தி.நகர், சென்னை-17,முதற்பதிப்பு 2002
2. கர்ணசேகரன் பே.சா,அறுபத்துமூன்று அருளாளர்கள்,சுகுணா பிரிண்டர்ஸ்,காந்திபுரம், கோவை-12, முதற்பதிப்பு 2006
3. கல்யாண சுந்தரனார் திரு.வி, சைவசமயம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108, முதற்பதிப்பு 2007
4. சுப்பிரமணியன் ச.வே,பன்னிருதிருமுறை,மணிவாசகர் பதிப்பகம் பாரிமுனை, சென்னை-108, முதற்பதிப்பு -2007
5. சேதுராமன்.சி, தமிழ் இலக்கிய வரலாறு,பாவை பிரிண்டர்ஸ், ராயப்பேட்டை, சென்னை,முதற்பதிப்பு 2012
6. நடராசன் பி.ரா, பதினொராந் திருமுறை, மூலமும் உரையும்,உமா பதிப்பகம் சென்னை,முதற்பதிப்பு 2005
7. இராஜசேகரன். இரா,சைவப்பெருவெளியில் காலம்,நர்மதா வெளியீடு,தி.நகர், சென்னை-17 முதற்பதிப்பு 2003